STEP TOGETHER

இரகசியமானதும், சுயாதீனமானதுமான உதவிக்கு:

**1800 875 204 – இனை அழையுங்கள் அல்லது STEPTOGETHER.COM.AU** எனும் வலைத்தளத்தினைப் பார்வையிடுங்கள்.

உதவித் தொலைபேசி இணைப்பில் மொழிபெயர்ப்பு சேவை உள்ளது.

**தொடர்பில் இருங்கள்**

- @StepTogetherAU
- @StepTogetherAU
- /company/step-together/

NSW அரசாங்கத்தால் நிதியுதவி அளிக்கப்பட்டு, On The Line – இனால் வழங்கப்படுகிறது.




**வன்முறைமிக்க தீவிரவாதப் பாதையைத் தவிர்க்க உங்களுக்குத் தெரிந்தவர்களுக்கு உதவுங்கள்.**

**1800 875 204 – இனை அழையுங்கள் அல்லது STEPTOGETHER.COM.AU** எனும் வலைத்தளத்தினைப் பார்வையிடுங்கள்.

Tamil



**வன்முறைமிக்க தீவிரவாதம் என்பது நம் அனைவரையும் பாதிக்கும் ஒரு பிரச்சினையாக இருப்பதுடன், இன, மத அல்லது அரசியல் நம்பிக்கைகளைப் பொருட்படுத்தாது – சமூகத்தின் எந்தவொரு பிரிவிலிருந்தும் எழக்கூடியதாகவும் உள்ளது.**

**உங்களுக்குத் தெரிந்த ஒருவர், வன்முறைமிக்க தீவிரவாதத்தில் ஈடுபடக் கூடும் என நினைத்துப் பார்ப்பது அச்சமூட்டுவதாக இருக்கலாம். ஆனால் அவற்றுக்குப் பங்களிக்கும் சமூகக் காரணிகள் வியத்தகு வண்ணம் பொதுவானவை: பின்வாங்குதல், பிறரிலிருந்து விலகியிருத்தல் மற்றும் தனிமை.**

**இந்த உணர்வுகள் தீவிரமடைந்து, அவை ஆழ்ந்த அரசியல், கருத்தியல் அல்லது சமய ஆர்வங்களுடன் இணையும்போது, வன்முறைமிக்க தீவிரவாதத்தில் ஈடுபடுவதற்கான அபாயம் அதிகமாகின்றது.**

## உங்களால் உதவ முடியும்

நீங்கள் அக்கறை கொண்டிருக்கும் ஒருவருக்கு, நீங்கள் அவர்களுக்காக இருக்கிறீர்கள் என்பதனை அந்த அக்கறையைக் காட்டுவதன் மூலமாகவும், ஒரு முடிவிற்கு வராமல் கவனமாகச் செவிமடுத்துக் கேட்பதன் மூலமாகவும் வெளிப்படுத்தி, ஒரு பாதுகாப்பான வழியில் அவர்களுடைய தேவைகளை அடைந்து கொள்வதற்கு நீங்கள் உதவி புரியக்கூடியதாக இருக்கலாம்.

நீங்கள் அக்கறை கொண்டுள்ள ஒருவருக்கு உதவுவதன் மூலமாக, இந்த உணர்வுகள் வன்முறை நடத்தையாக உருவெடுத்து வளர்வதை நீங்கள் தடுப்பதுடன், உங்களுடைய சமூகத்தை சாத்தியமான தீங்கிலிருந்து பாதுகாக்கவும் முடியும்.

## Step Together – இனால் எவ்வாறு உதவ முடியும்

**Step Together** என்பது வன்முறைமிக்க தீவிரவாதப் பாதையை நோக்கி செல்லும் தமக்குத் தெரிந்த ஒருவருக்கு 'உதவி செய்பவர்களுக்கு உதவுவதை' இலக்காகக் கொண்டிருக்கும் ஒரு உதவித் தொலைபேசி இணைப்பு மற்றும் இணையவழிச் சேவையாகும்.

**1800 875 204** – இனை அழையுங்கள் அல்லது **steptogether.com.au** எனும் வலைத்தளத்தினைப் பார்வையிடுங்கள்.